# மூன்றாம் பருவம்

செய்யுள் (காப்பியங்கள்) நாடகம், இலக்கிய வரலாறு
பயன்முறைத்தமிழ்

நோக்கம்: தமிழ் மொழியின் வாழ்வியல் சார்ந்த அறிவுக் கூறுகளையும் பண்புகளையும் கற்பித்தல்.

பயன்: தமிழ்மொழியின் தொன்மையும் இலக்கிய வளத்தையும் அறிய வைத்தல்

அலகு: 1

1. சிலப்பதிகாரம் - புகார்க்காண்டம்
   இந்திர விழாஊரெடுத்த காதை
2. மணிமேகலை - பாத்திரம் பெற்ற காதை

அலகு: 2

1. கம்பராமாயணம் - மாரீசப் படலம் (82 பாடல்கள்)
2. பெரியபுராணம் - இளையான்குடி மாற நாயனார் புராணம்

அலகு: 3

1. சீறாப்புராணம் - உடும்பு பேசிய படலம்
2. இரட்சணிய யாத்திரிகம்- சிலுவைப்பாடு (36 பாடல்கள்)

அலகு: 4

1. நாடகம் - மருதுபாண்டியர்
   தொ.மு. ரகுநாதன் (சரித்திர நாடகம்)

அலகு: 5

1. இலக்கிய வரலாறு - காப்பியங்கள்
2. கடிதம் - அலுவலகக் கடிதம்
   உறவுமுறைக் கடிதம்

Scanned by CamScanner

# அலகு - 1

# சிலப்பதிகாரம்

## இந்திரவிழா ஊர் எடுத்த காதை

தமிழின் முதல் காப்பியம் என்ற சிறப்பிற்குரியது சிலப்பதிகாரம். இயல் இசை நாடகம் என்ற அமைப்பில் விளங்குவதால் இதனை முத்தமிழ்க் காப்பியம் என்று அழைப்பர். இதன் ஆசிரியர் இளங்கோவடிகள் ஆவர்.

**"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதும்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்பதூஉம்"**

என்னும் மூன்று உண்மைகளின் அடிப்படையில் எழுந்தது. இவற்றைப் போன்றே மூன்று நாடுகளை, மூன்று வேந்தரை, மூன்று தமிழரை ஒன்று சேர்க்க எழுதப்பட்ட நூல். புலவர் மன்னரைப் பாடிய முறையை மாற்றி, மன்னர் வழித்தோன்றிய மக்களுள் சிறந்தோரைக் காவிய மாந்தராக்கிப் பாடிய புதுமையை உடையது.

இந்நூல் மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது. இந்நூல் நாடகக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், புரட்சிக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றெல்லாம் வழங்கப்படுகிறது. இதில் இந்திரவிழா ஊரெடுத்த காதை நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.

Scanned by CamScanner

# இந்திரவிழா ஊர் எடுத்த காதை

அலைநீர் ஆடை, மலைமுலை ஆகத்து,
ஆரப் பேரியாற்று. மாரிக் கூந்தல்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதையிருட் படாஅம் போக நீக்கி
உதய மால்வரை உச்சித் தோன்றி

உலகுவிளங்கு அவிர்ஒளி மலர்கதிர் பரப்பி
வேயா மாடமும்; வியன்கல இருக்கையும்
மான்கண் காலதர் மாளிகை இடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயன்அறவு அறியா யவனர் இருக்கையும்

கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்துஇருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்
வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்

பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல் வெறுக்கையோடு அளந்துகடை அறியா

வளர்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கள்நொடை ஆட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்உப்புப் பகருநர்

பாசவர் வாசவர் பல்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்
கஞ்சகாரரும் செம்புசெய் குநரும்
மரம்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
மண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்

பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்

கிழியினும் கிடையினும் தொழில் பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மக்களும்
குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்

வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்
கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்

பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகும் மறையோர் இருக்கையும்
வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை இருக்கையும்

திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொடு
அணிவளை போழுநர் அகன்பெரு வீதியும்
சூதர் மாகதர் வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்

பூவிலை மடந்தையர் ஏவற் சிலதியர்
பயில்தொழில் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி இருக்கையும்
கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தேர் ஊருநர் கடுங்கண் மறவர்

இருந்துபுறம் சுற்றிய பெரும்பாய் இருக்கையும்
பீடுகெழு சிறப்பின் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பின் பட்டினப் பாக்கமும்
இருபெரு வேந்தர் முனைபிடம் போல
இருபாற் பகுதியின் இடைநிலம் ஆகிய

கடைகால் யாத்த மிடைமரச் சோலை
கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்குஇன்றி நிலைஇய நாள்-அங் காடியில்
சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென
வெற்றிவேல் மன்னற்கு உற்றதை ஒழிக்களனத்

தேவர் கோமான் ஏவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகைப்

Scanned by CamScanner

புழுக்கலும் நோலையும் விழுக்குஉடை மடையும்
பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து
துணங்கையர் குரவையர் அணங்குஎழுந்து ஆடிப்

பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கஎன வாழ்த்தி
மாதர் கோலத்து வலவையின் உரைக்கும்
மூதிற் பெண்டிற் ஓதையின் பெயர

மருவூர் மருங்கின் மறம்கொள் வீரரும்
பட்டின மருங்கின் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப் பலிபீடிகை
வெந்திறல் மன்னற்கு உற்றதை ஒழிக்கஎனப்
பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம்பு ஆகஎனக்

கல்உமிழ் கவணினர் கழிப்பிணி கறைத்தோல்
பல்வேல் பரப்பினர் மெய்உறத் தீண்டி
ஆர்த்துக் களம்கொண்டோர் ஆர்அமர் அழுவத்துச்
சூர்த்துக் கடைசிவந்த சூடுநோக்குக் கருந்தலை
வெற்றி வேந்தன் கொற்றம் கொள்க என.

நற்பலி பீடிகை நலம்கொள வைத்து ஆங்கு
உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலி ஊட்டி
இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்

வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுக - இம்
மண்ணக மருங்கின் என்வலிகெழு தோள்எனப்
புண்ணிய திசைமுகம் போகிய அந்நாள்
அசைவுஇல் ஊக்கத்து நசைபிறக்கு ஒழியப்

பகைவிலக் கியதிஇப் பயங்கெழு மலைஎன
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையின் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நல்நாட்டுக்
கோன்இறை கொடுத்த கொற்றப் பந்தரும்

Scanned by CamScanner

மகதநல் நாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்துஓங்கு மரபின் தோரண வாயிலும்
பொன்னினும் மணியினும் புனைந்தன ஆயினும்

நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பின்அவர் தொல்லோர் உதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்
ஒருங்குடன் புணர்த்து, ஆங்கு உயர்ந்தோர் ஏத்தும்
அரும்பெறல் மரபின் மண்டபம் அன்றியும்

வம்ப மாக்கள் தம் பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பல்பொதிக்
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலும் ஒரீஇய ஆகிக்
கட்போர் உளர்எனின் கடுப்பத் தலைஏற்றிக்

கொட்பின் அல்லது கொடுத்தல் ஈயாது
உள்ளுநர்ப் பணிக்கும் வெள்ளிடை மன்றமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகுமெய் யாளரும் முழுகினர் ஆடிப்
பழுதுஇல் காட்சி நல்நிறம் பெற்று

வலம்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்
வஞ்சம் உண்டு மயல்பகை உற்றோர்
நஞ்சம் உண்டு நடுங்குதுயர் உற்றோர்
அழல்வாய் நாகத்து ஆர்எயிறு அழுந்தினர்
கழல்கண் கூளி கடுநவைப் பட்டோர்

சுழல வந்து தொழத்துயர் நீங்கும்
நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும்
தவம்மறைந்து ஒழுகும் தன்மை இலாளர்
அவம்மறைந்து ஒழுகும் அலவற் பெண்டிர்
அறைபோகு அமைச்சர் பிறர்மனை நயப்போர்

பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளர்என்
கைக்கொள் பாசத்துக் கைப்படுவோர் எனக்
காதம் நான்கும் கடுங்குரல் எடுப்பிப்
பூதம் புடைத்து உணும்பூத சதுக்கமும்
அரைசுகோல் கோடினும் அறங்கூறு அவையத்து

Scanned by CamScanner

உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவைநீர் உகுத்துப்
பாவை நின்றுஅழூஉம் பாவை மன்றமும்
மெய்வகை உணர்ந்த விழுமியோர் ஏத்தும்
ஐவகை மன்றத்தும் அரும்பலி உறீஇ

வச்சிரக் கோட்டத்து மணம்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி
வால்வெண் களிற்று-அரசு வயங்கிய கோட்டத்துக்
கால்கோள் விழாவின் கடைநிலை சாற்றித்
தயங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து

மங்கல நெடுங்கொடி வான்உற எடுத்து
மரகத மணிபொடு வயிரம் குயிற்றிப்
பவளம் திரள்கால் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுகத்து யாங்கணும்
கிம்புரி பகுவாய்க் கிளர்முத்து ஒழுக்கத்து

மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரணம் நிலைஇய தோம்அறு பசும்பொன்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும்பொன் படாகை
தூமயிர்க் கவரி சுந்தரச் சுண்ணத்து

மேவிய கொள்கை வீதியிற் செறிந்து-ஆங்கு
ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
அரச குமரரும் பரத குமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் தொகுதியர்
இவர்பரித் தேரினர் இயைந்துஒருங்கு ஈண்டி

அரைசுமேம் படீஇய அகநிலை மருங்கில்
உரைசால் மன்னன் கொற்றம் கொள்கஎன
மாஇரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
ஆயிரத்து ஓர்எட்டு அரசுதலைக் கொண்ட
தண்நறுங் காவிரி தாதுமலி பெருந்துறைப்

புண்ணிய நல்நீர் பொற்குடத்து ஏந்தி
மண்ணகம் மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டிப்
பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்

வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபின் தீமுறை ஒருபால்

நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந்து ஒருபால்
அறவோர் பள்ளியும் அறனோர் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்

திறவோர் உரைக்குஞ் செயல்சிறந்து ஒருபால்
கொடித்தேர் வேந்தனொடு கூடா மன்னர்
அடித்தளை நீங்க அருள்சிறந்து ஒருபால்
கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்
பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரொடு

எண்அருஞ் சிறப்பின் இசைசிறந்து ஒருபால்
முழவுக்கண் துயிலாது முடுக்கரும் வீதியும்
விழவுக்களி சிறந்த வியலுள் ஆங்கண்
காதற் கொழுநனைப் பிரிந்துஅலர் எய்தா
மாதர்க் கொடுங் குழை - தன்னோடு

இல்வளர் முல்லை மல்லிகை மயிலை
தாழிக் குவளை சூழ்செங் கழுநீர்
பயில்பூங் கோதை பிணையலிற் பொலிந்து
காமக் களிமகிழ்வு எய்திக் காமர்
பூம்பொதி நறுவிரைப் பொழில்ஆட்டு அமர்ந்து

நாள்மகிழ் இருக்கை நாளங் காடியில்
பூமலி கானத்துப் புதுமணம் புக்குப்
புகையும் சாந்தும் புலராது சிறந்து
நகைஆடு ஆயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு

திரிதரு மரபின் கோவலன் போல
இளிவாய் வண்டினொடு இன்இள வேனிலொடு
மலய மாருதம் திரிதரு மறுகில்
கருமுகில் சுமந்து குறுமுயல் ஒழித்தாங்கு
இருகருங் கயலோடு இடைக்குமிழ் எழுதி

Scanned by CamScanner

அங்கண் வானத்து அரவுப்பகை அஞ்சி
திங்களும் ஈண்டுத் திரிதலும் உண்டுகொல்
நீர்வாயத் திங்கள் நீள்நிலத்து அமுதின்
சீர்வாய்த் துவலைத் தருநீர் மாந்தி
மீன்ஏற்றுக் கொடியோன் மெய்பெற வளர்த்த
வானவல்லி வருதலும் உண்டுகொல்
இருநில மன்னற்குப் பெருவளம் காட்டத்
திருமகள் புகுந்ததுஇச் செழும்பதி ஆம்என
எரிநிறத்து இலவமும் முல்லையும் அன்றியும்
கருநெடுங் குவளையும் குமிழும் பூத்துஆங்கு
உள்வரிக் கோலத்து உறுதுணை தேடிக்
கள்ளக் கமலம் திரிதலும் உண்டுகொல்
மன்னவன் செங்கோல் மறுத்தல் அஞ்சிப
பல்லுயிர் பருகும் பருவாய்க் கூற்றம்
ஆண்மையில் திரிந்துதன் அருந்தொழில் திரியாது
நாண்உடைக் கோலத்து நகைமுகம் கோட்டிப்
பண்மொழி நரம்பின் திவவுயாழ் மிழற்றிப்
பெண்மையில் திரியும் பெற்றியும் உண்டென
உருவி லாளன் ஒருபெருஞ் சேனை
இகலமர் ஆட்டி எதிர்நின்று விலக்கியவர்
எழுதுவரிக் கோலம் முழுமையும் உறீஇ
விருந்தொடு புக்க பெருந்தோள் கணவரொடு
உடனுறவு மரீஇ ஒழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனையுறை மகளிர்
மாதர் வாள்முகத்து மணித்தோட்டுக் குவளைப்
போதுபுறங் கொடுத்துப் போகிய செங்கடை
விருந்தின் தீர்ந்திலது ஆயின் யாவதும்
மருந்தும் தரும்கொல் இம்மாநில வரைப்புஎனக்
கையற்று நடுங்கும் நல்வினை நடுநாள்
உள்ளக நறுந்தாது உறைப்ப மீதுஅழிந்து
கள்உக நடுங்கும் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உள்நிறை கரந்து அகத்துஒளித்து நீர்உகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநாள் அகத்துஎன்

Scanned by CamScanner

# மணிமேகலை

சிலப்பதிகாரத்தை ஒட்டித் தமிழுக்குக் கிடைத்த இரண்டாவது காப்பியம் மணிமேகலை. இது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் எழுதப்பட்டது. காலம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு. இக்காப்பியம் பௌத்த சமயக் கருத்துக்களைப் பரப்புவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நூல் விழாவறை காதை முதல் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகளை உடையது. இக்காப்பியம், மணிமேகலை துறவு, முதற் சமயக்காப்பியம், அறக்காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது.

பசிப்பிணி நீக்குவதைத் தலையாய நோக்கமாகக் கொண்டது இக்காப்பியம். சிறைச்சீர்திருத்தம், பரத்தமை ஒழிப்பு, பசிப்பிணி அகற்றுதல். உடல் ஊனமுற்றோர்க்கு உதவுதல், மது ஒழிப்பு, சிறை ஒழிப்பு என்னும் பல கருத்துக்களையும் கூறுவதால் இது சமுதாயச் சீர்திருத்தக் காப்பியமாகவும் விளங்குகிறது. இதில் 'பாத்திரம் பெற்ற காதை' பாடமாக அமைந்துள்ளது.

Scanned by CamScanner

## பாத்திரம் பெற்ற காதை

## தூயவளே நீ யார்?

மணிமே கலாதெய்வம் நீங்கிய பின்னர்
மணிபல் லவத்திடை மணிமேகலை - தான்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மலர்ப் பொய்கையும் தாழ்ந்தனள் நோக்கிக்
காவதந் திரியக் கடவுட் கோலத்துத்
தீவ திலகை செவ்வனந் தோன்றிக்
கலங்கவிழ் மகளிரின் வந்தீங் கெய்திய
இலங்குதொடி நல்லாய் யார்நீ என்றாலும்
எப்பிறப் பகத்துள் யார்நீ யென்றது
பொற்கொடி யன்னாய் பொருந்திக் கேளாய்
போய பிறவியில் பூமியங் கிழவன்
இராகுலன் மனையான் இலக்குமி யென்பேர்
ஆய பிறவியில் ஆடலங் கணிகை
மாதவி யீன்ற மணிமே கலையான்
என்பெயர்த் தெய்வம் ஈங்கெனைக் கொணரவிம்
மன்பெரும் பீடிகை என்பிறப் புணர்ந்தேன்
ஈங்கென் வரவிதீங் கெய்திய பயனிது
பூங்கொடி யன்னாய் யார்நீ யென்றலும்

## தீவதிலகை எனது பெயர்

ஆயிழை தன்பிறப் பறிந்தமை யறிந்த
தீவ திலகை செவ்வனம் உரைக்கும்
ஈங்கிதன் அயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடியினை யாகிய
பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குள தாதலின்
தொழுதுவலங் கொண்டு வந்தேன் ஈங்குப்
பழுதில் காட்சியிந் நன்மணிப் பீடிகை
தேவர்கோன் ஏவலிற் காவல் பூண்டேன்
தீவ திலகை என்பெயர் இதுகேள்

Scanned by CamScanner

## தீவதிலகை இன்னும் சில சொன்னாள்

தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல்லறம் பிறழா நோன்பினர்
கண்டுகை தொழுவோர் கண்டதற் பின்னர்ப்
பண்டைப் பிறவியர் ஆகுவர் பைந்தொடி
அரியர் உலகத் தாங்கவர்க் கறமொழி
உரிய துலகத் தொகுதலை யாக

ஆங்ஙன மாகிய அணியிழை இதுகேள்
ஈங்கிப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமுகி என்னுங் கொழுநீ ரிலஞ்சி
இருதிள வேனிலில் எரிகதி ரிடபத்

தொருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை யமுத சுரபியெனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்

## அந்தநாள் இந்தநாள் ஆகும்

அந்நா ளிந்நாள் அப்பொழு திப்பொழுது
நின்னாங்கு வருவது போலும் நேரிழை
ஆங்கதிற் பெய்த ஆருயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருத்துதல் அல்லது
தான்தொலை வில்லாத் தகைமைய தாகும்
நறுமலர்க் கோதை நின்னூ ராங்கண்
அறவணன் தன்பாற் கேட்குவை மிதன்திறம்

## பாத்திரம் பெற்றனள்

என்றவள் உரைத்தலும் இளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவ திலகை தன்னொடுங் கூடிக்

கோமுகி வலஞ்செய்து கொள்கையின் நிற்றலும்
எழுந்துவலம் புரிந்த இளங்கொடி செங்கையில்
தொழுதகை மரபிற் பாத்திரம் புகுதலும்
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்திரை யின்றி மனமகிழ் வெய்தி

## உன் அடி வழுங்குவேன்

மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கறம் முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இருந்தோய் நின்னடி

கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நாகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தலென் நாவிற்
கடங்கா தென்ற வாயிழை முன்னர்ப்

## பசிதீர்த்தோர் புகழுக்கு எல்லை இல்லை

போதி நீழற் பொருந்தித் தோன்றும்
நாதன் பாதம் நவைகெட ஏத்தித்
தீவ திலகை சேயிழைக் குரைக்கும்

பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக் கென்நா நிமிராது

## பசியின் கொடுமை

புல்மரம் புகையப் புகையழல் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அரசுதலை நீங்கிய அருமறை யந்தணன்
இருநில மருங்கின் யாங்கணுந் திரிவோன்
அரும்பசி களைய வாற்றுவது காணான்

திருந்தா நாயூன் தின்னுத லுறுவோன்
இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளந் தருதலின் மன்னுயி ரோங்கிப்
பிழையா விளையுளும் பெருகிய தன்றோ

## உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்

ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உயிர்க்கொடை பூண்ட உரவோ யாகிக்
கயக்கறு நல்லறங் கண்டனை யென்றலும்

## மணிமேகலையின் பதில்

விட்ட பிறப்பியான் விரும்பிய காதலன்
திட்டி விடமுணச் செல்லுயிர் போவுழி
உயிரொடு வேவே னுணர்வொழி காலத்து
வெயில்விளங் கமையத்து விளங்கித் தோன்றிய
சாது சக்கரன் றணையா னூட்டிய
காலம் போல்வதோர் கனாமயக் குற்றேன்
ஆங்கதன் பயனே ஆருயிர் மருந்தாய்
ஈங்குகிப் பாத்திரம் என்கைப் புகுந்தது

## தாயாக இருந்து தாங்குவேன்

நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
வித்தி நல்லறம் விளைந்த வதன்பயன்
துய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து
வயிறுகாய் பெரும்பசி யலைத்தற் கிரங்கி
வெயிலென முனியாது புயலென மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
அறங்கடை நில்லா தயர்வோர் பலரால்
ஈன்ற குழவி முகங்கண் டிரங்கித்
தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே
நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்
தகன்சுரைப் பெய்த ஆருயிர் மருந்தவர்
முகங்கண்டு சுரத்தல் காண்டல்வேட் கையேன்என

## வான்வழியே சென்றனள்

மறந்தே னதன்திறம் நீயெடுத் துரைத்தனை
அறங்கரியாக அருள்சுரந் தூட்டும்

சிறந்தோர்க் கல்லது செவ்வனஞ் சுரவாது
ஆங்ஙன மாயினை அதன்பயன் அறிந்தனை
ஈங்குநின் றெழுவாய் என்றவள் உரைப்பத்
தீவ திலகை தன்னடி வணங்கி
மாபெரும் பாத்திரம் மலர்க்கையில் ஏந்திக்
கோமகன் பீடிகை தொழுது வலங்கொண்டு
வானூ டெழுந்து மணிமே கலைதான்

## மனக்கவலை மாற்றினாள்

வழுவறு தெய்வம் வாய்மையின் உரைத்த
எழுநாள் வந்த தென்மகள் வாராள்
வழுவாய் உண்டென மயங்குவோள் முன்னர்
வந்து தோன்றி யவர்மயக் கங்களைந்
தந்தில் அவர்க்கோர் அற்புதங் கூறும்

## மாதவி சுதமதிக்கு பழம்பிறப்பை உணர்த்தினாள்

இரவி வன்மன் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி
அமுத பதிவயிற் றரிதல் தோன்றித்
தவ்வைய ராகிய தாரையும் வீரையும்
அவ்வைய ராயினீர் நும்மடி தொழுதேன்

## அறவணர் அடி பணிவோம்

வாய்வ தாக மானிட யாக்கையில்
தீவினை அறுக்கும் செய்தவம் நுமக்கீங்
கறவண அடிகள் தம்பாற் பெறுமின்
செறிதொடி நல்லீர் உம்பிறப் பீங்கி
தாபுத் திரன்கை அமுத சுரபியெனும்
மாபெரும் பாத்திரம் நீயிரும் தொழுமெனத்
தொழுதனர் ஏத்திய தூமொழி யாரொடும்
பழுதறு மாதவன் பாதம் படர்கேம்
எழுகென வெழுந்தனள் இளங்கொடி தானென.

Scanned by CamScanner